**CC.No. 52 /2023 (JM.No.II, DHARMAPURI)**

**23.01.2026**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. (எதிரிகள் ஆஜர்)**

**PW– 7 : திருமதி. வளர்மதி (மாவட்ட பதிவாளர்)**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது கோபிசெட்டிபாளையத்தில் மாவட்ட பதிவாளராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 15.02.2019 முதல் தருமபுரி பதிவு மாவட்டத்தில் மாவட்ட பதிவாளராக பணியாற்றி வந்தேன். அப்போது நெப்போலியன் என்பவர் 21.09.2020 அன்று தன்னுடைய சொத்தையும் சேர்த்து ஆவணபதிவுகளை மேற்கொண்டதினால் அவற்றை ரத்து செய்யுமாறு புகார் கொடுத்தார். அந்த புகாரின் அடிப்படையில் விசாரணை மேற்கொண்டதில் 2017ம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட ஆவணத்தில் இருந்த வாரிசு சான்றிதழில் ரவிசந்திரன் என்ற ஒரு நபர் மட்டும் வாரிசாக இணைத்து வாரிசு சான்றிதழ் வழங்கபட்டிருந்தது. 2020 ம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட ஆவணத்தில் இருந்த வாரிசு சான்றிதழில் மொத்தம் 6 நபர்கள் வாரிசாக இணைத்து வாரிசு சான்றிதழ் வழங்கபட்டிருந்தது. அதனால் வாரிசு சான்றிதழ் போலியாக வைத்திருந்ததாக குறிப்பிட்டு மூன்று ஆவணங்களும் முறையற்ற ஆவணங்கள் என்று அறிவித்து மேற்படி மூன்று ஆவணங்களை முன் ஆவணங்களாக குறிப்பிட்டு ஆவணங்கள் ஏதேனும் பதிவுக்கு தாக்கல் செய்தால் பதிவு மேற்கொள்ள வேண்டாம் என்றும், மேலும் இது சொத்துரிமை குறித்த புகார் என்றும், ஏற்கனவே 2018 ம் ஆண்டு நீதிமன்ற வழக்கு நிலுவையில் இருப்பதனால் மேற்படி வழக்கின் மூலமே புகார் மனுதாரர் பரிகாரம் தேடி கொள்ளலாம் என்று ஆணை பிறப்பித்தேன். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் 4961/ஆ3, 02.12.2022 அன்று காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் கேட்டு கொண்டதில் பேரில் நான் விசாரணை செய்த 7 விசாரணை ஆவணங்களின் உண்மை நகலை நான் கோப்பில் இருந்து அனுப்பி வைத்தேன். அந்த விசாரணை கோப்பு உண்மை நகல் **<u>அ.த.சா.ஆ.8</u>** ஆக குறியீடு செய்யப்படுகிறது. (**அ.சா..ஆ.8 எதிரி தரப்பில் அசல் ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்று கூறி ஆட்சேபனை செய்யப்படுகிறது**) **ஆட்சேபனைக்கு உட்பட்டு ஆவணம் <u>குறியீடு செய்யப்படுகிறது</u>**. இது குறித்து தருமபுரி மாவட்ட குற்றப்பிரிவு காவல் துறை, துணை கண்காணிப்பாளர் அவர்கள் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1. அ.சா.ஆ.8 ன் அசல் அலுவலக கோப்புகளில் பராமரிக்கப்படுகிறது என்றால் சரிதான். அந்த அசலை போலிஸார் கைபற்றினார்களா என்றால் இல்லை. பதிவு துறை தலைவர் சுற்றறிக்கையின் அடிப்படையில் தான் மாவட்ட பதிவாளர்கள் ஆவணத்தை ரத்து செய்யும் அதிகாரம் வழங்கப்பட்டது என்றால் சரிதான். அந்த சுற்றறிக்கை மாண்புமிகு உயர் நீதிமன்றம் ரத்து செய்தமையால் அந்த சுற்றறிக்கை தற்போது நடைமுறையில் இல்லை. மேற்படி சுற்றறிக்கையில் அடிப்படையில் தான் விசாரணை மேற்கொண்டேன் என்றாலும், அ.சா.ஆ.8 ஆணை பிறப்பித்தேன் என்றாலும் சரிதான். என்னுடைய விசாரணையில் நெப்போலியன் உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்திருந்த விவரம் தெரியவந்தது என்றால் சரிதான். என்னிடம் புகார் அளித்த நெப்போலியனுக்கு சொத்தில் உரிமை இருக்கிறதா, இல்லையா என்று முடிவு செய்யும்

அதிகாரம் எனக்கு இல்லை என்றால் சரிதான். காவேரி கவுண்டர் வாங்கிய சொத்தை அவர் இறந்த பிறகு அவருடைய வாரிசுகளான ரஞ்சிதம், வரதராஜன் ஆகிய இருவருக்கும் உரிமையுள்ளது என்று என்னுடைய விசாரணையில் தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். என்னுடைய விசாரணையில் ரஞ்சிதத்தின் வாரிசுகளில் நெப்போலியன் இல்லை என்பது தெரிய வந்தது என்றால் சரிதான். பத்திரத்திற்குட்பட்ட சொத்தில் புகார்கொடுத்த நெப்போலியனுக்கு உரிமை உள்ளதா என்று என்னால் சொல்ல முடியாது என்றால் சரிதான்.

2. என்னுடைய விசாரணையில் ஆள்மாறாட்டம் செய்து ஆவணம் பதிவு செய்யப்பட்டதாக கண்டறியபடவில்லை என்றால் சரிதான். ரஞ்சிதத்தின் சொத்தை அவர்களின் குடும்ப ஏற்பாடுகளின் மூலம் ரவிசந்திரனுக்கு உடன் பிறந்தவர்கள் கொடுக்கப்பட்ட விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். ரவிசந்திரனுக்கு உடன் பிறந்தவர்கள் அந்த சொத்தில் உள்ள உரிமையை 2020 ம் ஆண்டு 1–ம் எதிரி ரவிசந்திரனுக்கு விடுதலை பத்திரம் எழுதி கொடுத்துள்ளனர் என்றால் சரிதான். பிரச்சினைக்குரிய ஆவணங்களில் இணைக்கப்பட்டுள்ள வாரிசு சான்றிதழ்கள் அசலாக இல்லாமல் நகலாக இருந்தது என்றால் சரிதான். வாரிசு சான்றிதழ்கள் பொது ஆவணம் என்பதால் யார் வேண்டுமானாலும் சான்றிட்ட நகலை பெற முடியும் என்றால் எனக்கு அதைப்பற்றி தெரியாது. சாட்சி பின்னிட்டு யார் வேண்டுமானாலும் நகலை பெற முடியும் என்று கூறுகிறார். மேற்படி வாரிசு சான்றிதழ்களின் நகலை அலுவலகத்திற்கு வந்து யாரேனும் பெற விண்ணப்பம் செய்தார்களா, அதன் அடிப்படையில் நகல்கள் கொடுக்கப்பட்டதா என்ற விவரம் விசாரணையில் உட்படுத்தவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.8 ல் இருக்கும் ஆவண வாக்குமூலங்கள் என்னால் அல்லது என் முன்னிலையில் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். என் முன்னால் நேரடியாக ஆஜராகி அவர்கள் கைப்பட எழுதியும், தட்டச்சு செய்தும் கொடுக்கப்பட்டது.

3. பதிவு சட்டத்தின் படி என் முன்னிலையில் விசாரணை செய்து அதன் பின்னர் அந்த விசாரணை செய்த வாக்குமூலத்தை பதிவு செய்ய வேண்டும் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. முறையற்ற ஆவணம் என்று நான் உத்தரவு பிறத்தது முகாந்திரம் இல்லை என்றால் சரியல்ல. அந்த ஆவணங்கள் சட்டபடி செல்லதக்க ஆவணம் என்று நீதிமன்றம் தான் முடிவு செய்ய முடியும் என்றால் சரிதான்.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.01.23 17:27:14 +0530

**CC.No. 52/2023 (JM.No.II, DHARMAPURI)**

**23.01.2026**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. (எதிரிகள் ஆஜர்)**

**PW– 8 : திருமதி. சரஸ்வதி (மண்டல துணை வட்டாச்சியர்)**

**முதல் விசாரணை**

நான் தற்போது காரிமங்கலத்தில் மண்டல துணை வட்டாச்சியராக பணியாற்றி வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ந.க.எண்.5787/2020 ஆ1, 11.05.2021 ம் வருடம், திருமதி ரஞ்சிதம் 22.11.2024 ம் அன்று இறந்தமைக்கு வாரிசு சான்றிதழ் வழங்கபட்டது சம்பந்தமாக மாவட்ட குற்றபிரிவு காவல் ஆய்வாளர் அவர்கள் கடிதத்தின் மூலம் கேட்டு கொண்டதின் பேரில் நான் அறிக்கையை அனுப்பி வைத்தேன். அந்த ஆவணம் **அ.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. (**இந்த அறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ள வாரிசு சான்றிதழ் நகலாக (Xerox Copy) உள்ளதால் எதிரி தரப்பில் குறியீடு செய்வதற்கு ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு, ஆவணம் குறியீடு செய்யப்படுகிறது**). கடந்த 05.08.2020 முதல் 01.11.2020 வரை பாப்பிரெட்டிபட்டியில் வட்டாட்சியராக பணியாற்றி வந்தேன். 11.05.2021 ல் மாவட்ட குற்றபிரிவு காவல் ஆய்வாளர் அவர்கள் இரண்டு வாரிசு சான்றிதழ்கள் உள்ளன, அதில் எந்த வாரிசு சான்றிதழ் உங்கள் அலுவலகத்தில் வழங்கபட்டது என்று உண்மை தன்மை கோரி கடிதம் கொடுத்தார்கள். 401/2005 ஆ3, நாள் 24.05.2005 மற்றும் முமு401/2005 பி2, நாள் 24.01.2005 இந்த இரண்டு வாரிசு சான்றிதழ்களில் எது உண்மை என்று அந்த கடிதத்தில் கோரப்பட்டிருந்தது. இந்த இரண்டு வாரிசு சான்றிதழ்களில் எது உண்மை என்று எங்களிடம் இருந்த ஆவணங்களை பரிசீலித்து பார்த்ததில் முமு401/2005 பி2, நாள் 24.01.2005 என்ற ஆவணம் தான் வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து வழங்கபட்டிருந்தது என்றும், அவை தான் உண்மையான வாரிசு சான்றிதழ் என்று மாவட்ட குற்றபிரிவு காவல் ஆய்வாளர் அவர்களுக்கு கடிதம் அனுப்பினேன். அது தான் தற்போது குறியீடு செய்யப்பட்ட ஆவணம் ஆகும். இது குறித்து தருமபுரி மாவட்ட குற்றபிரிவு காவல் துறையினர் என்னை விசாரித்தனர்.

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

1. அ.சா.ஆ.9 ஆவணம் என்னால் தயாரிக்கப்பட்ட ஆவணம் இல்லை என்றால் சரிதான். வட்டாட்சியரின் அறிக்கைக்கு உண்மை நகலுக்கு நான் கையெழுத்திட்டேன். அலுவலகத்தில் ஒரு கடிதம் கொடுக்கப்பட்டால் ந.க.எண் கொடுக்கப்பட்டு வரிசை படுத்தப்படும் என்றால் சரிதான். ஆய்வாளர் கொடுத்த கடிதத்தில் Endorsement எதுவும் செய்யபடாமல் மேற்குறிப்பு இல்லாமல் உள்ளது என்றால் சரிதான், அது அலுவலகத்தில் Office Copy ல் இருக்கும். அ.சா.ஆ.9 ல் இணைக்கப்பட்டுள்ள வாரிசு சான்றிதழில் நகலில் உண்மை நகல் என்று சான்றழிக்கப்படவில்லை என்றால் சரிதான். காவல் ஆய்வாளர் அவர்கள் இந்த வழக்கு சம்பந்தமாக வாரிசு சான்றிதழ்களுக்கு சம்பந்தபட்ட கோப்பு ஏதாவது கைப்பற்றினாரா என்றால் இல்லை. அலுவலகத்தில் வாரிசு சான்றிதழ்கள் பொது ஆவணங்களாக பராமரிக்கப்படும் என்றாலும், அதன் நகல் உரிய நடைமுறையின் படி கேட்டால் கொடுக்க முடியும் என்றால் சரிதான். சம்பந்தபட்டவர்கள் கேட்டால் கொடுப்போம். என்னிடம் உண்மை தன்மை குறித்து கேட்ட ஆவணங்களை காவல் ஆய்வாளர் நகலாக கொடுத்து கேட்டார்.

2. சான்றிட்ட நகல் கொடுப்பதற்கு தனியாக கோப்பு பராமரிக்கப்படுகிறதா என்றால் பராமரிக்கப்படுகிறது. ரஞ்சிதம் என்பவரின் வாரிசு சான்றிதழ் குறித்து நகல் கேட்டு யாரேனும் மனு ஏதாவது தாக்கல் செய்து பெறப்பட்டுள்ளதா என்றாலும், அது குறித்து நான் ஏதேனும் பரிசீலனை செய்தேனா என்று எனக்கு ஞாபகம் இல்லை. நகல் வழங்குவதற்கான பதிவேடுகளில் ஏதேனும் குறிப்பு உள்ளதா என்று எனக்கு ஞாபகம் இல்லை. கோப்புகளை சரிவர பரிசீலனை செய்யாமல் காவல்ஆய்வாளர் கேட்டு கொண்ட வகையில் அ.சா.ஆ.9 எழுதி கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

SUSHMITHA RAJAMANICKAM
Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.01.23 17:27:22 +0530

**CC.No. 52/2023 (JM.No.II, DHARMAPURI)**

**23.01.2026**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. (எதிரிகள் ஆஜர்)**

**PW– 9 : திருமதி. பார்வதி (தனி வட்டாச்சியர்)**

**முதல் விசாரணை**

நான் தற்போதுமாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பிற்படுத்தப்பட்ட நலத்துறை நில எடுப்பு தனி வட்டாட்சியராக பணியாற்றி வருகிறேன். பாப்பிரெட்டிபட்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் 11.05.2021 அன்று வருவாய் வட்டாட்சியராக பணிபுரிந்து வந்தேன். மாவட்ட குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் அவர்கள் இரண்டு வாரிசு சான்றிதழ்களை கொடுத்து அதில் எந்த வாரிசு சான்றிதழ் உண்மையென கண்டறியும் பொருட்டு கடிதம் கொடுத்தார். முமு 401/2005 ஆ3, நாள் 24.05.2005 மற்றும் முமு 401/2005பி2, நாள் 24.01.2005 இரண்டு வாரிசு சான்றிதழ்கள் உண்மை தன்மை அறியும் பொருட்டு என்னிடம் கொடுக்கப்பட்டது. பாப்பிரெட்டிபட்டி வட்டாட்சியர் அலுவலக கோப்பினை பரிசீலனை செய்த‌தில் முமு 401/2005 பி2, நாள் 24.01.2005 இந்த வாரிசு சான்றிதழ் தான் உண்மையென கண்டறிந்து அறிக்கை அனுப்பப்பட்டது. இது குறித்து தருமபுரி மாவட்ட குற்றபிரிவு காவல் துறையினர் என்னை விசாரித்தனர்.

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

வாரிசு சான்றிதழ்கள் சம்பந்தமாக அசல் கோப்புகள் எதுவும் காவல் துறையினர் எங்களிடம் இருந்த பெறவில்லை. அ.சா.ஆ.9 ன் அசல் கோப்பையினை காவல் துறையினர் எங்களிடம் இருந்த பெறவில்லை. Office Copy எங்களுடைய அலுவலகத்தில் உள்ளது. Office Copy உடன் ஒப்பிட்டு பார்க்காமல் என்னால் அ.சா.ஆ.9 பற்றி சொல்ல முடியும் என்றால் சரிதான். ஒரு நபருக்கு கொடுக்கப்படும் வாரிசு சான்றிதழின் நகலை உறவினர் மற்றும் வாரிசுதாரர்கள் கேட்டால் கொடுப்போம். அந்த நகல்களை உண்மை நகல் என்று சான்றிட்டு கொடுப்போம். 11.05.2021 அன்று ஒப்பிட்டு பார்க்க கொடுக்கப்பட்ட வாரிசு சான்றிதழ் ஆவணம் அசல் ஆவணம் இல்லை என்றால் சரிதான். உண்மை நகல் என்று கொடுக்கப்பட்ட ஆவணத்தின் நகல் (Xerox Copy) கொடுக்கப்பட்டு ஒப்பிட்டு பார்த்து கேட்டு கொள்ளப்பட்டது. மேற்படி வாரிசு சான்றிதழ்களின் உண்மை ஆவணத்தின் நகல் கேட்டு விண்ணப்பம் யாரேனும் செய்து வாங்கி உள்ளனரா என்றாலும், அது சம்பந்தமாக பதிவேட்டை காவல் ஆய்வாளர் அவர்கள் கேட்டு பெறவில்லை என்றாலும், அந்த பதிவேட்டினை பரிசீலனை செய்து அறிக்கை வழக்குமாறு கேட்டு கொண்டாரா என்றால் இல்லை. மேற்படி விண்ணப்பம் கேட்டு அலுவலகத்தில் ஏதேனும் கொடுக்கப்பட்டதா என்ற விவரம் அ.சா.ஆ.9 இல்லை என்றால் சரிதான். நான் அசல் ஆவணத்தை தான் ஒப்பிட்டு அறிக்கை வழங்கினேன். என்னிடம் வாரிசு சான்றிதழ்களை குறித்து அலுவலக கோப்புகளில் இருந்து சரிபார்த்து கொடுக்க சொல்லிகேட்டார்கள், ஆவணங்கள் ஏதும் கொடுக்கவில்லை. 24.05.2005 தேதியிட்ட வாரிசு சான்றிதழ் ஆவணத்தில் யார் கையெழுத்திட்டார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. ஒரு ஆவணத்தின் முத்திரை மாற்றப்பட்டிருந்தால் அது ஆய்வு கூடத்திற்கு அனுப்பி நிபுணரின் அறிக்கை படி தான் தெரிந்து கொள்ள முடியும் என்றால் சரிதான். காவல் ஆய்வாளர் கேட்டு கொண்ட வகையில் அ.சா.ஆ.9 வழங்கியுள்ளேன் என்றால் சரியல்ல.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.01.23 17:27:32 +0530